நிலையத்தில் உள்ள உற்பத்திப் பிரிவில் வேலை பார்க்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது. நல்ல ஆர்வத்துடன் பயின்று வெளிவருபவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு வசதி உள்ளது.

(இ) பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் L.E.E. ; L.C.E. வகுப்புகளில் பயிற்சி பெற குறைந்த பொதுக் கல்வித் தகுதியாக பள்ளி இறுதி வகுப்பில் தேறியும், ரசாயனம், பௌதிகம், கணிதம் முதலிய பாடங்களை விருப்பப் பாடமாகவும் எடுத்திருக்க வேண்டும். ஆனால் மாமல்லபுரத்திலுள்ள சிற்பக் கலைப் பயிற்சிக் கூடத்தில் சேர 9 ஆவது வகுப்பில் தேறியிருந்தால் போதுமானது. மேலும் அவர்கள் பாரம்பரியமாக கற்சிற்பங்கள் செதுக்கும் குடும்பங்களைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். 7 ஆவது அல்லது 8 ஆவது வகுப்பில் தேர்ச்சியடையாதவர்களும் அடைந்தவர்களும் தொழிற்கல்வியில் சிறந்த ஆர்வம் பெற்றிருந்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவே, மகாபலிபுரம் சிற்பக் கலைப் பயிற்சிக்கூடத்தில் பயிலும் மாணவர்களுக்கான சான்றிதழை டிப்ளோமாவுக்குச் சமமாக ஏற்க இயலாது.

(உ) இத்துறையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் குறைவாகவே உள்ளதால் கோயில்கள், மண்டபங்கள் முதலிய இடங்களில் உள்ள கல் சிற்ப வேலைகளுக்கு இப்பயிற்சி பெற்ற மாணவர்களே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் பயிற்சி பெற்று சர்டிபிகேட் பெற்ற மாணவர்கள் நமது மாநிலத்தில் மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இது வரையிலும் 78 இனங்கள் செய்து முடித்திருக்கிறார்கள். மொத்த மாணவர்கள் எண்ணிக்கை என்னிடத்திலே இல்லை.

## *Salt Production*

* 100. *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Central Government have informed the State Government that at the time of the completion of works

relating to the Tuticorin Harbour Project, they should make arrangements there for producing salt in 11,000 acres, and

(b) the action taken thereon by the Tamil Nadu Government?

### உப்பு விளேவித்தல்

**திரு. கே. ராஜாராம (திரு.ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்):** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தூத்துக்குடி துறைமுக வேலே முடிவு பெறும் சமயம் அங்கு 11,000 எக்கரில் உப்பு விளேவிக்க தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்திருக்கிறதா ?

(இ) அதற்குத் தமிழக அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) 11,000 எக்கரில் உப்பு விளேவிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறும் குறிப்பு மத்திய அரசிடமிருந்து எதுவும் வரவில்லே. ஆனல், கட்டுமான வேலேயின் கீழ் இருக்கும் தூத்துக்குடி புதிய துறைமுகத்தின் போக்குவரத்தின் விஸ்தரிப்புக்கு ஏற்ப தூத்துக்குடியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உப்பு விளேச்சலேப் பெருக்கும் திட்டம் அதிகாரிகள் மட்டத்தில் விவாதிக்கப்பட்டு புதிய துறைமுகத்தின் போக்குவரத்திற்கு ஏற்ப போதுமான புதிய பகுதிகளில் உப்பு விளேச்சலேப் பெருக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

### *Workers afflicted by silicosis*

* 101. *Q.*—THIRU S. JAYARAMA REDDIAR (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that workers at the Government Quartz Crushing Plant at Salem are bting afflicted by silicosis ; and

(*b*) if so, the action taken by the Government to prevent this industrial health hazard?